(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 12 (7).]

# பாராளுமன்றம்

## 12 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2014 ஒற்றோபர் 25 சனிக்கிழமை வெளியிடப்பட்டது

---

## 2014 நவெம்பர் 03, திங்கட்கிழமை

## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*

ஒதுக்கீடு (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றன.

---

## 2014 நவெம்பர் 17, திங்கட்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

2757/ '12

கௌரவ சஜித் பிரேமதாச,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) களுத்துறை மாவட்டத்தின் மத்துகம கல்விக் கோட்டத்தில் தற்போது மூடப்பட்டுள்ள பாடசாலைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி பாடசாலைகளின் பெயர்கள் யாவையென்பதையும்;

(iii) மூடப்பட்ட பாடசாலைகளிலுள்ள பௌதீக வளங்களின் பெறுமதி எவ்வளவென்பதையும்;

(iv) மேற்படி பாடசாலைகளிலுள்ள பௌதீக வளங்கள் பொது நிதியைப் பயன்படுத்தி நிர்மாணிக்கப்பட்டுள்ளதால் அவற்றை மக்களின் நன்மைக்காக பயன்படுத்துவதற்குரிய திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளனவா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3556/ '13

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2004 ஆம் ஆண்டிலிருந்து இற்றைவரை கம்பனிகள் சட்டத்தின் கீழ் பதியப்பட்டிருக்கின்ற அரசாங்கத்துக்குச் சொந்தமான கம்பனிகளின் எண்ணிக்கையை ஆண்டின் அடிப்படையிலும்;

(ii) ஒவ்வொரு கம்பனியினதும் கூட்டிணைக்கப்பட்டமைக்கான நோக்கம், அதிகாரமளிக்கப்பட்ட மற்றும் செலுத்திய மூலதனம் ஆகியவற்றை தனித்தனியாகவும்;

(iii) கூட்டிணைக்கப்பட்ட திகதியிலிருந்து இற்றைவரை அந்த அரசாங்கத்துக்குச் சொந்தமான கம்பனிகள் பெற்ற பங்கிலாபத்தையும்;

(iv) அக்கம்பனிகளின் கணக்காய்வாளர்களையும்;

(v) அவர்கள் அரசாங்க பொறுப்பு முயற்சி பற்றிய குழுவின் (COPE) முன்னர் வந்துள்ளனரா என்பதையும்;

(vi) அவ்வாறெனின், அவர்கள் அரசாங்க பொறுப்பு முயற்சி பற்றிய குழுவின் (COPE) முன்னர் எப்போது வந்தனர் என்பதையும்

அவர் கூறுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4399/ '13

கௌரவ புத்திக பதிரண,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கண்டி மாவட்ட வன உத்தியோகத்தர் பிரிவு அலுவலகங்களினால் நிருவகிக்கப்படும் காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவுக்குச் சொந்தமான காணிகளின் அளவு யாதென்பதையும்;

(ii) குறித்த காணிகளில் வன பாதுகாப்புத் திணைக்களத்தினால் பைனஸ் மற்றும் ஏனைய வனப் பயிர்ச்செய்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளமையை அறிவாரா என்பதையும்;

(iii) அவ்வாறு பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ள காணிகளின் அளவு யாதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) வன பாதுகாப்புத் திணைக்களத்தினால் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ள காணிகளை தனிநபர்கள் அனுமதியின்றி கைப்பற்றி உள்ளார்கள் என்பதையும்;

(ii) குறித்த காணிகளில் ஒரு பகுதியை அரசாங்கம் பொது மக்களுக்கு வழங்கியுள்ளதையும்

அவர் அறிவாரா?

(இ) (i) மேலே (அ) (iii) இல் குறிப்பிடப்பட்டுள்ள வனப் பிரதேசத்தில், தனிநபர்கள் அனுமதியின்றிக் குடியமர்ந்துள்ள காணியின் அளவு மற்றும் அரசாங்கத்தினால் பொது மக்களுக்கு வழங்கப்பட்டுள்ள காணியின் அளவு வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) ஒதுக்கு வனப் பிரதேசங்கள், மேலே கூறப்பட்டுள்ளவாறு மனிதனின் தேவைக்காக பயன்படுத்தப்படுவதால் நீரேந்து பிரதேசங்கள் அழிந்துவிடுமென்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iii) ஆமெனில், இந்த நிலைமையைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

4423/ '13

கௌரவ (திருமதி) ரோஸி சேனாநாயக்க,— உள்ளூராட்சி, மாகாணசபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பாணந்துறை நீச்சல் தடாகத்தின் நிர்வாகத்தை மேற்கொள்கின்ற தரப்பு யாதென்பதையும்;

(ii) மேற்படி நீச்சல் தடாகம் நிர்மாணிக்கப்பட்ட ஆண்டு யாதென்பதையும்;

(iii) மேற்படி நீச்சல் தடாக நிர்மாணிப்புடன் தொடர்புடைய கணக்கு அறிக்கைகளை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(iv) தற்போது இந்த நீச்சல் தடாகத்தின் "நீச்சல் பயிற்றுவிப்பாளர்" பதவியை வகிப்பவர் யாரென்பதையும்;

(v) மேற்படி நபரின் தகைமைகள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4614/ '13

கௌரவ சுஜீவ சேனசிங்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) இலங்கையின் தற்போதைய தலைக்குரிய வருமானம் நியம அடிப்படையிலும் இலங்கை ரூபாய்களிலும் எவ்வளவென்பதை வெவ்வேறாக அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) நாட்டில் வருமானம் ஈட்டும் ஆட்களிடையேயுள்ள மொத்த அரச ஊழியர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி எண்ணிக்கையில் தற்போதைய தலைக்குரிய வருமானத்துக்கு சமமான அல்லது அதை விட அதிகமான சம்பளத்தை பெறும் அரச ஊழியர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iii) அது, ஒட்டுமொத்த அரச ஊழியர்களின் எண்ணிக்கையில் சதவீத அடிப்படையில் எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

4681/ '13

கௌரவ பி. ஹரிசன்,— தாவரவியல் பூங்காக்கள், பொதுப் பொழுதுபோக்கு அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தெஹிவளை மிருகக்காட்சிசாலையின் அபிவிருத்திப் பணிகளுக்காக கடந்த ஐந்து வருடங்களினுள் ஒதுக்கப்பட்ட நிதி யாது;

(ii) மேற்படி மிருகக்காட்சிசாலையில் உள்ள விலங்கினங்களின் எண்ணிக்கை யாது;

(iii) அதன் பரப்பளவு யாது

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) பொது நலவாய அரச தலைவர்களின் மாநாட்டுக் (CHOGM) கிராமத்துக்கு தெஹிவளை மிருகக்காட்சிசாலையிலிருந்து கொண்டுசெல்லப்பட்ட விலங்கினங்கள் இறந்திருப்பின், அவ்வாறு இறந்துள்ளவை உள்ளூர் விலங்கினங்களா அல்லது வெளிநாட்டு விலங்கினங்களா என்பதையும்;

(ii) மேற்படி கிராமத்துக்கு கொண்டுவரப்பட்ட பறவை இனங்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iii) மேற்படி கிராமத்துக்கு கொண்டுவரப்பட்ட விலங்குகள் அல்லது பறவை இனங்களில் உடல் ஊனமுற்றவற்றின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iv) மேற்படி விலங்கின வகைகள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5179/ '14

கௌரவ அஜித் பி. பெரேரா,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) உள்ளூராட்சித் தேர்தல்களை நடாத்துவதுடன் சம்பந்தப்பட்டதாக ஒவ்வொரு உள்ளூராட்சி நிறுவனத்திலும் இருக்க வேண்டிய பிரதிநிதிகளின் எண்ணிக்கை இதுவரை வெளியிடப்படாதிருப்பதற்கான காரணம் யாதென்பதையும்;

(ii) ஒவ்வொரு உள்ளூராட்சி நிறுவனத்திற்கும் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்படும் ஆளுகைப் பிரதேசங்கள் இதுவரை வெளியிடப்படாதிருப்பதற்கான காரணம் யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5200/ '14

கௌரவ சுனில் ஹந்துன்நெத்தி,— நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஹிக்கடுவை, பத்தேகமை, நில்ஹேன (B153) பாதையை அபிவிருத்தி செய்கின்ற கருத்திட்டத்தின் பொறுப்பு வீதி அபிவிருத்தி அதிகார சபையின் கீழ் காணப்படுகின்றதா;

(ii) மேற்படி கருத்திட்டத்துக்கென சுவீகரிக்கப்படும் சொத்துக்களுக்கான கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படும் முறையியல் உள்ளடங்கிய மீள்தாபிப்பு வரைவுத் திட்டம் கோனபீனுவல பிரதேச செயலகத்தில் பொது மக்களுக்கு பார்வையிட வைக்கப்பட்ட திகதி யாது;

(iii) மேற்குறிப்பிட்ட திகதியளவில் காணி சுவீகரிகரிப்பு தொடர்பில் மேற்கொள்ளப்பட்டிருந்த நடவடிக்கைகள் யாவை;

(iv) மேலே (ii) இல் வினவப்படும் திகதியில் காணி சுவீகரிப்புக்கு ஏற்புடையதாக கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த நபர்களின் எண்ணிக்கை யாது;

(v) கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்ட குறித்த காணியின் அளவு, சுவீகரிக்கப்பட வேண்டிய மொத்த காணியின் அளவில் எத்தனை சதவீதம்;

(vi) இற்றைப்படுத்தப்பட்ட மீள்தாபிப்புத் திட்டம் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் இணையத்தளத்தில் வெளியிடப்பட்ட திகதி யாது;

(vii) இணையத்தளத்தில் வெளியிடுவதற்கு மேலதிகமாக, குறித்த காணிகளை சுவீகரிப்பது தொடர்பில் குறித்த தரப்பினரும் நபர்களும் நேரடியாக அறிவுறுத்தப்பட்டார்களா;

(viii) ஆமெனில், அது எவ்வாறு

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி கருத்திட்டத்திற்காக சொத்துக்களை சுவீகரித்தல் சார்பில் கொடுப்பனவுகளை மேற்கொள்கையில் முறைகேடு நேர்ந்துள்ளது என்பதை அறிவாரா;

(ii) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

# 2014 நவெம்பர் 18, செவ்வாய்க்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

2758/ '12

கௌரவ சஜித் பிரேமதாச,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அநுர பண்டாரநாயக்க நிதியத்தின் மூலம் வத்துபிட்டிவல வைத்தியசாலையில் அமைக்கப்பட்ட இரத்த வங்கிக்காக செலவிடப்பட்ட பணத்தொகை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி இரத்த வங்கி திறக்கப்பட்டதன் பின்னர் மீண்டும் மூடப்பட்டுள்ளதென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iii) வத்துபிட்டிவல வைத்தியசாலைக்கு வருகின்ற நோயாளிகளின் நன்மைக்காக பயன்படுத்தக்கூடிய விதத்தில் மேற்படி இரத்த வங்கியை தயார்படுத்தி மக்களிடம் ஒப்படைப்பது எத்திகதியில் என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3557/ '13

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2006 ஆம் ஆண்டு முதல் இற்றை வரையிலான,

(i) கம்பனிகள் சட்டம் அல்லது பாராளுமன்றத்தின் விசேட சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட ஏதேனும் அரசுக்குச் சொந்தமான கூட்டுத்தாபனம், அதிகார சபை, திணைக்களம், அரச கம்பனி ஆகியவை அரசாங்க தனியார் பங்குடமைக்கு, எவருக்கேனும் அல்லது ஏதேனும் நிறுவனத்துக்கு மாற்றிக் கொடுக்கப்பட்டு விற்கப்பட்டு அல்லது ஒப்படைக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) அவ்வாறெனில், ஏதேனும் மேற்சொன்ன மாற்றங்களுக்கு உட்பட்ட அரச நிறுவனங்களின் பெயர்களை சம்பந்தப்பட்ட மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்ட திகதிகளுடனும்

அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா?

(ஆ) நிறுவன அடிப்படையில்,

(i) சம்பந்தப்பட்ட மாற்றங்களை மேற்கொண்டமைக்கான நோக்கத்தையும்;

(ii) கேள்விப்பத்திரங்கள், தெரிவுகள் அல்லது வேண்டுகோள் விடுக்கப்படாத முன்மொழிவுகள் மூலமாக மேற்சொன்ன மாற்றங்கள் மேற்கொள்ளப் பட்டுள்ளனவா என்பதையும்;

(iii) அதற்கு வழங்கப்பட்ட பெறுமதியையும் அது வழங்கப்படுவதற்கு கருத்திற் கொள்ளப்பட்ட மூலப்பிரமாணங்களையும்;

(iv) ஒப்படைத்த திகதியிலிருந்து இற்றைவரை கிடைக்கப்பெற்ற வருமானத்தை அல்லது பங்கு இலாபங்களை வருடவாரியாகவும்;

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4401/ '13

கௌரவ புத்திக பதிரண,— வன சீவராசிகள் வளப் பேணுகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சட்டவிரோதமான முறையில் காடுகளிலிருந்து பிடிக்கப்பட்ட யானைகளைப் பதிவு செய்வதற்கு சலுகைக் காலமொன்று வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) சட்டவிரோதமாக தடுத்து வைத்துள்ள யானைகளைப் பதிவு செய்வதற்காக ரூபா 10 இலட்சம் உரிமப்பத்திரக் கட்டணமொன்றை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றதா என்பதையும்;

(iii) அவ்வாறு பதிவுசெய்யும் போர்வையில் யானைகளை வியாபாரம் செய்தல் இடம்பெறுவதாக சுற்றாடலியலாளர்கள் குற்றஞ் சாட்டுகின்றமையை அறிவாரா என்பதையும்;

(iv) மேலே (iii)இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு செயலாற்றுதலானது 2009ஆம் ஆண்டின் 22ஆம் இலக்க சட்டத்தால் இறுதியாக திருத்தப்பட்டவாறான 1937ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க தாவர, விலங்கினப் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தை மீறுவதாகும் என்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(v) ஆமெனில், அத்தகைய செயல்களை தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(vi) அவ்வாறு நடவடிக்கை எடுப்பாராயின், அத்திகதி யாதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4622/ '13

கௌரவ சுஜீவ சேனசிங்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) நுரைச்சோலை அனல் மின் நிலையம், அம்பாந்தோட்டை துறைமுகம், அம்பாந்தோட்டை விமான நிலையம், அம்பாந்தோட்டை (சூரியவெவ) கிரிக்கட் மைதானம், திருகோணமலை மின் உற்பத்தி நிலையம், சம்பூர் மின் உற்பத்தி நிலையம் ஆகியவற்றின் நிர்மாணிப்புகளுக்காக கேள்விப்பத்திரம் கோரப்பட்டதா என்பதையும்;

(ii) இன்றேல், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) கேள்விபத்திரம் கோரப்படாது மேற்படி கருத்திட்டங்களுக்குரிய நிர்மாணிப்புகள் வெளிநாட்டு தனியார் நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்படுகின்றபோது பாரியளவு தரகுத்தொகை பெற்றுக்கொள்ளல் இடம்பெற்றுள்ளதா என்பதையும்;

(ii) சீனாவின் கடன் அடிப்படையில் நடைமுறைப்படுத்தப்படும் மேற்படி சகல கருத்திட்டங்களுக்குமான கடன் தொடர்பாக உடன்படிக்கை செய்துகொள்ளப்பட்டுள்ள சராசரி வட்டி வீதம் எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

5103/ '14

கௌரவ அகில விராஜ் காரியவசம்,— பிரதம அமைச்சரும் புத்தசாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் திணைக்களத்தினால் குறைந்த வருமானம் பெறும் குடுபங்களைச் சேர்ந்த பாடசாலை மற்றும் பல்கலைக்கழக மாணவர்களின் கல்விக்காக புலமைப் பரிசில் வழங்கப்படுகின்றதா என்பதையும்;

(ii) ஆமெனின், 2013 ஆம் ஆண்டிலும் 2014 ஆம் ஆண்டில் இற்றை வரையிலும் வழங்கப்பட்டுள்ள மேற்படி புலமைப்பரிசில்களின் எண்ணிக்கை யாவை என்பதையும்;

(iii) மேற்படி புலமைப்பரிசில் பெறும் மாணவரொருவருக்கு கிடைக்கும் பணத் தொகை எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேலே குறிப்பிடப்பட்ட புலமைப் பரிசிலுக்காக விண்ணப்பிக்க வேண்டிய முறை யாதென்பதையும்;

(ii) மேற்படி புலமைப் பரிசிலை வழங்குவதற்காக மாணவர்கள் தெரிவு செய்யப்படும் முறையியல் யாதென்பதையும்;

(iii) மேற்படி மாணவர்களின் கைகளுக்கு புலமைப் பரிசில் தொகை மாதாந்தம் பெற்றுக்கொடுக்கப்படுகின்றதா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5227/ '14

கௌரவ திஸ்ஸ அத்தநாயக்க,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2014.05.12 ஆம் திகதி கொண்டாடப்பட்ட "குடும்ப சுகாதார சேவைகள் தினம்" சார்பாக சனாதிபதி அவர்களுக்கு விருது ஒன்றை வழங்குவதற்காக அரசாங்க குடும்ப சுகாதார சேவைகள் சங்கத்தினால் சுகாதார மருத்துவ உத்தியோகத்தர் அலுவலகங்களின் ஊடாக அங்கு சேவையில் ஈடுபட்டுள்ள குடும்ப சுகாதார சேவை உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 5000 சேகரிக்கப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) நாடு பூராகவும் அமைந்துள்ள சுகாதார மருத்துவ உத்தியோகத்தர் அலுவலகங்களின் எண்ணிககை எத்தனையென்பதையும்;

(ii) அவற்றில் கடமையில் ஈடுபட்டுள்ள ஒட்டுமொத்த குடும்ப சுகாதார சேவை உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iii) மேலே குறிப்பிடப்பட்டுள்ளவாறு குடும்ப சுகாதார சேவை உத்தியோகத்தர் களிடமிருந்து அறவிடப்பட்டுள்ள மொத்தப் பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(iv) மேற்படி பணத்தின் மூலம் அதிமேதகு சனாதிபதி அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள பரிசில் யாதென்பதையும்;

(v) இத்தகையதொரு விருதை பெற்றுக்கொடுப்பதற்கு அரசாங்க குடும்ப சுகாதார சேவை ஊழியர் சங்கத்தின் உத்தியோகத்தர்கள் செயலாற்றியமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) அரசாங்க குடும்ப சுகாதார சேவை ஊழியர் சங்கத்தின் தலைவியின் பெயர் யாதென்பதையும்;

(ii) இவர் கொண்டுள்ள தகைமைகள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

5263/ '14

கௌரவ (அல்ஹாஜ்) ஏ. எச். எம். அஸ்வர்,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) தெல்லிப்பளை வைத்தியசாலையில் கடமையாற்றும் மருத்துவர்களுக்கும், தாதியர்களுக்கும் தங்குமிட வசதிகள் இல்லை என்பதையும்;

(iii) மேற்படி வைத்தியாசாலையில் மின்விசிறிகள் செயற்படாமை போன்ற பல குறைபாடுகள் காணப்படுகின்றன என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) தெல்லிப்பளை வைத்தியசாலையில் காணப்படும் சகல குறைபாடுகளையும் நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5441/ '14

கௌரவ வசந்த அலுவிஹாரே,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) மாத்தளை, அலுவிஹாரே, ஸ்ரீ சரணங்கர வீதிக்கும் எகொடகம வீதிக்கும் இடையிலுள்ள சிறு வீதியில் தாம்பரவள்ளிய குன்றிலிருந்து ஊற்றெடுக்கின்ற அருவிக்குக் குறுக்காக பாலமொன்று அமைக்கப்பட்டுள்ளதென்பதையும்;

(ii) பாலத்தின் ஒரு புறத்தில் வீதியொன்று காணப்பட்ட போதிலும் மறு புறத்தில் சென்று வருவதற்கான பாதையொன்று அமைக்கப்படவில்லையென்பதையும்;

(iii) மேற்படி பாலம் அமைக்கப்படுதல் தொடர்பாக எவ்வித அறிவித்தல் பலகையும் பொருத்தப்படவில்லை என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி குறிப்பிடப்பட்டுள்ள பாலத்தின்,

(i) நிர்மாணிப்புடன் தொடர்புடைய திட்டங்களை தயாரித்த நிறுவனங்கள் அல்லது நபர்கள் யாவரென்பதையும்;

(ii) நிர்மாணிப்புகள் யாரால் மேற்கொள்ளப்பட்டன என்பதையும்;

(iii) வேலை ஆரம்பிக்கப்பட்ட திகதி மற்றும் வேலை முடிவுறுத்தப்பட்ட திகதி தனித்தனியாக யாதென்பதையும்;

(iv) நீளம் மற்றும் அகலம் எவ்வளவென்பதையும்;

(v) நிர்மாணிப்புகளுக்காக செலவிடப்பட்ட பணத்தொகை எவ்வளவென்பதையும்;

(vi) நிர்மாணிப்புகளுக்காக நிதி ஏற்பாடுகள் எவ்வாறு பெறப்பட்டன என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) மேற்படி பாலம் அமைக்கப்படுவதன் மூலம் மக்களுக்குக் கிடைக்கின்ற நன்மைகள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி பாலத்துடன் இணைந்துள்ள வீதியின் எஞ்சியுள்ள பகுதியை அமைப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(iii) அதற்கு எவ்வளவு காலம் எடுக்கும் என்பதையும்;

(iv) அதற்காக செலவிடுவதற்கு உத்தேசித்துள்ள பணத்தொகை எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

# 2014 நவெம்பர் 19, புதன்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

2759/ '12

கௌரவ சஜித் பிரேமதாச,— சுற்றாடல், புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அகலவத்த வீச்சிடக் காட்டு உத்தியோகத்தர் அலுவலகத்துக்குச் சொந்தமான "மோல்காவ உத்தியோகபூர்வ விடுதி" பராமரிக்கப்படாது கைவிடப்பட்டுள்ளமைக்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி உத்தியோகபூர்வ விடுதியை உரிய முறையில் திருத்தி வனப் பாதுகாப்புத் திணைக்களத்தின் உத்தியோகத்தர்களுக்கு பெற்றுக் கொடுப்பதன் மூலம் அப்பிரதேசத்தில் நடைபெறுகின்ற பாரிய அளவிலான அனுமதியற்ற மரம் வெட்டுதலையும் ஏற்றிச்செல்லலையும் குறைக்கலாம் என்பதை எற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iii) அகலவத்த பிரதேசத்தின் காடுகளை அனுமதியற்ற மரம் வெட்டுபவர்களிடமிருந்து பாதுகாப்பதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3558/ '13

கௌரவ ரவி கருணாநாயக்க,— முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டமூலத்தைச் சட்டவாக்கம் செய்வதன் நோக்கத்தையும்;

(ii) 2012 பெப்புருவரி மாத்திலிருந்து இற்றைவரை செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் கருத்திட்டங்களின் எண்ணிக்கை, பெயர், அனுசரணை அளிக்கும் நாடுகள், முதலீட்டின் பெறுமதிகள், வழங்கப்படவுள்ள உற்பத்தி அல்லது சேவை, வேலைவாய்ப்பின் இயலளவு ஆகியவற்றை வெவ்வேறாகவும்;

(iii) மேற்படி காலப்பகுதிக்காக ஒவ்வொரு முதலீட்டாளரினாலும் செலுத்தப்படவுள்ள வருடாந்தப் புரள்வு, தீர்வை ஆகியவற்றை வெவ்வேறாகவும்;

(iv) செயல்நுணுக்கு அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டம் காரணமாக அதே காலப்பகுதிக்காக வழங்கப்பட்ட வரி விலக்களிப்புகளின் மொத்தப் பெறுமதியையும்

அவர் கூறுவாரா?

(ஆ) 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டம், 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க சேர் பெறுமதி வரிச் சட்டம், 2002 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க நிதிச்சட்டம், 2005 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க நிதிச்சட்டம், 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க மதுவரி (விசேட ஏற்பாடுகள்) சட்டம், 2006 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க பொருளாதாரச் சேவை விதிப்பனவுச் சட்டம், 2002 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பற்று வரிச் சட்டம், சுங்கக்கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 235), தற்போதுள்ள ஏதேனும் மற்றைய சட்டம் அல்லது செய்சட்டம் ஆகியவற்றின் பிரகாரம் மேற்படி சட்டத்தின் மூலமாக மேற்சொன்ன காலப்பகுதிக்காக வழங்கப்பட்ட விலக்களிப்புகளை வெவ்வேறாக அவர் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

4402/ '13

கௌரவ புத்திக பதிரண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நாடெங்கிலுமுள்ள கல்வியியற் கல்லூரிகளுக்கென அங்கீகரிக்கப்பட்ட கல்விசார் பணியாட்டொகுதி எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) தற்போது மேற்படி பணியாட்டொகுதிகளில் மிகை அல்லது பற்றாக்குறை காணப்படுகிறதா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி கல்விசார் பணியாட்டொகுதியில் ஒவ்வொரு பதவிக்குமுரிய சம்பளங்கள் மற்றும் கொடுப்பனவுகள் வெவ்வேறாக யாவையென்பதை அவர் இச்சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5228/ '14

கௌரவ திஸ்ஸ அத்தநாயக்க,— முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2014 ஆம் ஆண்டின் முதலாவது காலாண்டினுள் இலங்கைக்குக் கிடைத்துள்ள வெளிநாட்டு முதலீடுகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) மேற்படி முதலீடுகளுக்காக ஈடுபடுத்தப்பட்டுள்ள பணத்தொகை வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி முதலீடுகள் மேற்கொள்ளப்பட்ட துறைகள் தனித்தனியாக யாவையென்பதையும்;

(iv) மேற்படி முதலீடுகளின் கீழ் செயற்படுத்தப்படுகின்ற கருத்திட்டங்கள் யவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி வெளிநாட்டு முதலீடுகளின் ஊடாக இந்நாட்டுக்குக் கிடைக்குமென எதிர்பாக்கப்படும் தொழில்வாய்ப்புக்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) வெளிநாட்டு முதலீட்டாளர்களை ஊக்குவிப்பதற்காக தற்போது வழங்கப்பட்டுள்ள சலுகைகள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5309/ '14

கௌரவ அஜித் பி. பெரேரா,— சுற்றாடல், புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கொழும்பு துறைமுக நகர (Colombo Port City) கருத்திட்டத்தின் மூலம் நிரப்புவதற்கு எதிர்பார்க்கப்படும் கடல் பிரதேசத்தின் பரப்பளவு யாது என்பதையும் ;

(ii) மேற்படி கருத்திட்டத்துக்காக கடலை நிரப்புவதனால் ஏற்படக்கூடிய சுற்றாடல் மாற்றங்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) மேற்படி கருத்திட்டத்தின் மூலம் மேற்கு கடலோரப் பிரதேசத்தில் வாத்துவையிலிருந்து சிலாபம் வரையிலான பிரதேசம் சுற்றாடல் தாக்கத்துக்கு உள்ளாகின்றது என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) கொழும்பு துறைமுக நகர, கருத்திட்டம் சார்ந்ததாக ஏற்படக் கூடிய சுற்றாடல் பாதிப்புகள் பற்றிய ஓர் அறிக்கை தயார் செய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், குறித்த அறிக்கையை பாராளுமன்றதுக்கு சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(iii) இன்றேல், இதற்கான காரணங்கள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5348/ '14

கௌரவ (திருமதி) அனோமா கமகே,— பாரம்பரிய கைத்தொழில்கள், சிறு தொழில்முயற்சி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மட்பாண்டக் கைத்தொழிலில் தங்கிவாழ்வோர் வசிக்கின்ற கிராமங்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி கைத்தொழிலில் தங்கிவாழும் குடும்பங்களின் எண்ணிக்கை யாது என்பதையும்

அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மட்பாண்டக் கைத்தொழிலுக்குத் தேவையான களிமண், மட்பாண்டக் கைத்தொழிலில் தங்கிவாழ்வோர் வசிக்கின்ற கிராமங்களிலிருந்தே பெற்றுக்கொள்ளப்படுகின்றதா என்பதையும்;

(ii) இன்றேல், மேற்படி கைத்தொழிலுக்குத் தேவையான களிமண் கொள்வனவு செய்யப்படுகின்றதா என்பதையும்;

(iii) மட்பாண்ட உற்பத்திச் சந்தை தொடர்பாக காணப்படுகின்ற பிரச்சினைகள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) மட்பாண்டக் கைத்தொழில், மட்பாண்டங்களை உற்பத்தி செய்வதற்குத் தேவையான இயந்திர சாதனங்களைப் பெற்றுக்கொள்ளல் மற்றும் தேவையான களிமண்ணைப் பெற்றுக்கொள்ளல் ஆகியவற்றுக்காக அரசாங்கம் வழங்கும் உதவிகள் யாவை என்பதையும்;

(ii) மட்பாண்டங்களைப் பயன்படுத்துதல் தொடர்பாக மக்கள் மத்தியில் ஊக்கத்தை ஏற்படுத்துவதற்காக அரசாங்கத்திடம் வேலைத்திட்டமொன்று உள்ளதா என்பதையும்

(iii) ஆமெனில், மேற்படி வேலைத்திட்டம் யாது என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

5415/ '14

கௌரவ அஜித் குமார,— பிரதம அமைச்சரும், பௌத்தசாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கொழும்பு மாவட்டத்தில் ஆட்களால் அல்லது தனியார் நிறுவனங்களால் அல்லது அரசாங்கத்தினால் பேணிவரப்படுகின்ற பொது மலசலகூடங்களின் எண்ணிக்கை யாது;

(ii) அவை அமைந்துள்ள இடங்கள் யாவை

என்பதை உள்ளூராட்சி நிறுவன மட்டத்தில் அவர் சபையில் சமர்ப்பிப்பாரா?

(ஆ) (i) பொது மலசலகூடங்களை ஆட்களுக்கோ அல்லது தனியார் நிறுவனங்களுக்கோ பெற்றுக்கொடுக்கின்ற முறையியல் யாது;

(ii) அவற்றை குத்தகைக்கு விட்டமையின் மூலம் 2011-2013 வரை பெற்ற வருமானம் யாது;

(iii) பொது மலசலகூட பாவனையின்போது ஒரு தடவைக்காக அறவிடப்படுகின்ற பணத்தொகை எவ்வளவு;

(iv) அப்பணத்தொகை தீர்மானிக்கப்படுகின்ற அளவுகோல்கள் யாவை;

(v) அந்த அளவுகோல்கள் தயாரிக்கப்படுகின்ற முறையியல்கள் யாவை

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) பொது மலசலகூடங்களைப் பராமரிக்கின்ற நிறுவனங்கள் மற்றும் ஏற்புடைய செலவுத் தலைப்பு யாது;

(ii) அந்த மலசலகூடங்களுக்கு எற்படுகின்ற நட்டத்தை அவற்றைப் பெற்றுக் கொண்டுள்ள தரப்பினர்களிடமிருந்து அறவிட்டுத் தீர்த்துக்கொள்வதற்கான முறையியலொன்று உள்ளதா;

(iii) இன்றேல், அதற்கான காரணங்கள் யாவை

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) (i) பொது மலசலகூடங்களை தனியார் கம்பனிகளுக்கு கையளிப்பதற்கான நோக்கங்கள் யாவை;

(ii) அரசாங்கம் அந்த இடங்களைப் பேணிவரும் பொறுப்பினை ஏற்காதிருப்பது ஏன்;

(iii) அரசாங்கத்தினால் பொது மலசலகூடங்களை பேணிவருவதற்கும் பராமரிப்பதற்குமான எதிர்காலத் திட்டமொன்று உள்ளதா

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(உ) இன்றேல், ஏன்?

5471/ '14

கௌரவ ஹுனைஸ் பாறூக்,— வெகுசன ஊடக, தகவல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தென்றல் சேவையின்,

(i) பணிப்பாளர் மற்றும் கட்டுப்பாட்டாளர் பதவிகளை வகிக்கின்ற உத்தியோகத்தர்களின் பெயர்கள் மற்றும் அவர்களின் கல்வித் தகைமைகள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி பதவிகளில் பதிற் கடமை புரியும் உத்தியோகத்தர்களின் பெயர்கள் மற்றும் கல்வித் தகைமைகள் யாவையென்பதையும்;

(iii) தென்றல் சேவையிலுள்ள நிரந்தர அறிவிப்பாளர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்

(iv) அந்த ஒவ்வொரு அறிவிப்பாளரினதும் பெயர் மற்றும் கல்வித்தகைமை யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி (அ) (i) மற்றும் (அ) (ii) இல் குறிப்பிடப்பட்டுள்ளவர்களுக்கு குறிப்பிட்ட பதவிகள் உரிய செயன்முறைக்கு அமைவாக வழங்கப்பட்டுள்ளன என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

## 2014 நவெம்பர் 20, வியாழக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

2760/ '12

கௌரவ சஜித் பிரேமதாச,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் அரச பாடசாலைகளில் நிலவும் தமிழ் மொழி மூல ஆசிரியர் வெற்றிடங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்காக தமிழ் ஆசிரியர்களை இந்தியாவிலிருந்து வரவழைப்பதற்கான திட்டமேதும் உள்ளதா என்பதையும்;

(iii) இந்தியாவிலிருந்து தமிழ் ஆசிரியர்களை வரவழைக்காது இலங்கையிலுள்ள தொழிலற்ற தமிழ் பட்டதாரிகளைக் கொண்டு சம்பந்தப்பட்ட வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3559/ '13

கௌரவ ரவி கருணாநாயக்க,— வெகுசன ஊடக, தகவல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2012 மற்றும் 2013ஆம் ஆண்டுகளுக்கான துறைசார் நிபுணர், ஆலோசகர் இவ்வகையான வேறு அதிகாரி எவரேனும் அமைச்சில் அல்லது அமைச்சின் கீழுள்ள வேறு ஏதேனும் நிறுவனத்தில் / அலுவலகத்தில் நியமிக்கப்பட்டனரா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், அவ்வாறு நியமிக்கப்பட்டவர்களின் பெயர்கள் மற்றும் அவர்கள் எப்போதிருந்து நியமிக்கப்பட்டனர் என்பதையும்;

(iii) அவர்களின் நியமனங்களின் நோக்கம்;

(iv) ஒரு மாதத்திற்கு அவர்களுக்காக ஏற்படும் மொத்த செலவு ஆகியவற்றையும்

அவர் கூறுவாரா?

(ஆ) (i) மேலே (அ) (i) இல் உள்ளவாறு 2009 ஆம் ஆண்டு தொடக்கம் 2011ஆம் ஆண்டு வரை ஏதேனும் நியமனம் வழங்கப்பட்டதா என்பதையும்;

(ii) அவர்கள் இப்போதும் பணிபுரிகின்றார்களா என்பதையும்;

(iii) அவ்வாறாயின், அவர்களை நியமிப்பதற்கு கருத்திற் கொள்ளப்பட்ட தொழில்சார் தகுதிகள் அல்லது வேறு தகவுதிறன்கள் யாவை என்பதையும்

அவர் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

4404/ '13

கௌரவ புத்திக பதிரண,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அரசாங்க வைத்தியசாலைகளில் 2013 ஆம் ஆண்டின் சனவரி தொடக்கம் ஒக்டோபர் 31 ஆம் திகதி வரையிலான காலத்தினுள் பயன்படுத்தப்பட்டுள்ள சேலயின் அளவு எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி கால கட்டத்தினுள் தனியார் வைத்தியசாலைகள் மற்றும் வேறு நிறுவனங்கள் மூலம் பயன்படுத்தப்பட்ட சேலயின் அளவு எவ்வளவென்பதையும்;

(iii) மேலே (i) மற்றும் (ii) இல் குறிப்பிடப்பட்டுள்ள மொத்த சேலயின் அளவில் இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் சேலயின் அளவு எவ்வளவென்பதையும்

அவர் கூறுவாரா?

(ஆ) (i) இலங்கையில் சேலயின் உற்பத்தி செய்யும் நிறுவனங்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(ii) தற்போது சேலயின் இறக்குமதி செய்யப்படும் நாடுகள் மற்றும் நிறுவனங்களின் பெயர்கள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு சமர்ப்பிப்பாரா?

(இ) (i) நாட்டின் சேலயின் உற்பத்தி உள்நாட்டுத் தேவையை பூர்த்தி செய்வதற்கு போதுமானதாக இல்லையெனில், வருடாந்தம் இறக்குமதி செய்யப்படும் சேலயின் அளவு எவ்வளவென்பதையும்;

(ii) 2013 ஆம் ஆண்டில் சேலயின் இறக்குமதிக்காக செலவிடப்பட்ட மொத்த பணத் தொகை எவ்வளவென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) (i) இலங்கையில் சேலயின் உற்பத்தியை ஆரம்பிக்கின்ற ஒருவருக்கு அரசாங்கத்தின் மூலம் வழங்கக் கூடிய சலுகைகள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி சலுகைகளை பெற்றுக்கொள்வதற்காக பின்பற்ற வேண்டிய முறையியல் யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

5264/ '14

கௌரவ (அல்ஹாஜ்) ஏ. எச். எம். அஸ்வர்,— சிறு ஏற்றுமதிப் பயிர்கள் ஊக்குவிப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நக்கிள்ஸ் வன ஒதுக்கப் பிரதேசத்தில் ஏலக்காய் பயிர்ச்செய்கையில் ஈடுபட்டிருந்த அண்ணளவாக எழுநூறு குடும்பங்கள் அப்பிரதேசத்திலிருந்து அகற்றப்பட்டுள்ளன என்பதையும்;

(ii) வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தால் நக்கிள்ஸ் வன ஒதுக்கத்தில் ஏலக்காய்ப் பயிர்ச்செய்கை தடைசெய்யப்பட்டமைக்கும் இந்தியாவிலிருந்து அதிகளவில் ஏலக்காய் இறக்குமதி செய்யப்படுவதற்குமிடையில் ஏதேனுமொரு தொடர்பு உள்ளதென்பதையும்;

(iii) பிரித்தானிய ஆட்சியாளர்களின் காலம் தொடக்கம் 75 ஆண்டுகளுக்கும் அதிக காலம் அறுநூறுக்கும் மேற்பட்ட குடும்பங்களின் பொருளாதார நலனுக்கு காரணமாக அமைந்திருந்த மேற்படி ஏலக்காய்ப் பயிர்ச்செய்கை தற்போது முற்றாக அழிக்கப்பட்டுள்ளது என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) மேலே குறிப்பிடப்பட்ட ஏலக்காய்ப் பயிர்ச்செய்கை மற்றும் குறித்த பயிர்ச்செய்கையாளர்களின் நலன் கருதி ஏதேனுமொரு நடவடிக்கையை மேற்கொள்வாரா என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5425/ '14

கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா,— தொழில், தொழில் உறவுகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அரசாங்க மற்றும் தனியார் நிறுவனங்களின் ஊழியர்களை தற்காலிகமாக ஆட்சேர்ப்புச் செய்யும் சட்டரீதியான கொள்கைச் சட்டகம் யாது என்பதையும்;

(ii) இவர்கள் நிரந்தரமாக்கப்படுவதற்கு முன்னர் எவ்வளவு காலம் தற்காலிக அடிப்படையில் சேவையாற்ற வேண்டும் என்பதையும்;

(iii) தற்காலிகமாக சேவையாற்றுகின்ற காலத்தினுள் இவர்களுக்கு சம்பளத்திற்கு மேலதிகமாக வேறு கொடுப்பனவுகளை (மாதாந்தம் அல்லது தொழில் காலத்தின் இறுதியில்) மேற்கொள்வதற்கு சேவை பெறுனருக்கு சட்டரீதியான கடப்பாடு உள்ளதா என்பதையும்;

(iv) ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கைப்பொறுப்பு நிதியம் இவர்களுக்கு வழங்கப்படுகின்றதா என்பதையும்

(v) இன்றேல், ஏன் என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5486/ '14

கௌரவ காமினீ ஜயவிக்ரம பெரேரா,— கால்நடை வளர்ப்பு, கிராமிய சனசமூக அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அண்மையில் நியூசிலாந்து அல்லது அவுஸ்திரேலியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட ஜர்சி இன கறவை மாடுகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அதற்கென செலவிடப்பட்ட பணத் தொகை (அமெரிக்க டொலர்) யாதென்பதையும்;

(iii) அந்த கறவை மாடுகளில் நோய்வாய்ப்பட்ட மற்றும் இறந்தவற்றின் எண்ணிக்கை யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) அந்த கறவை மாடுகள் நுவரெலியா பிரதேசம் தவிர்ந்த ஏனைய பிரதேசங்களுக்கு பொருத்தமானவை அல்ல என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) (i) அந்த கறவை மாடுகள் இறக்குமதி செய்யப்பட்டது அரசாங்கத்தின் நிதி மூலமா அல்லது கடனுதவி அடிப்படையிலா என்பதையும்;

(ii) அந்த கறவை மாடுகள் பகிர்ந்தளிக்கப்பட்ட மாவட்டங்கள் யாவை என்பதையும்;

(iii) கறவை மாடுகள் தேசிய கால்நடை வளர்ப்பு அபிவிருத்திச் சபையின் பண்ணைகளுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டனவா இல்லாவிடின் தனிப்பட்ட பால் பண்ணையாளர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டனவா என்பதையும்;

(iv) குருநாகல் மாவட்டத்திலுள்ள தேசிய கால்நடை வளர்ப்பு அபிவிருத்திச் சபையின் எந்தப் பண்ணைக்கு கறவை மாடுகள் வழங்கப்பட்டன என்பதையும்;

(v) அந்த கறவை மாடுகளில் நோய்வாய்ப்பட்ட அல்லது இறந்துபோனவற்றின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(vi) அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) (i) தற்போது நெதர்லாந்திலிருந்து கறவை மாடுகளை கொள்வனவு செய்வதற்கான கட்டளை அனுப்பப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அதற்கென செலவிடப்படும் பணத் தொகை யாதென்பதையும்;

(iii) அத்தொகை வெளிநாட்டு மூலங்களிலிருந்து பெறப்படுகின்றதா என்பதையும்;

(iv) 30-40 லீற்றர் பால் தருகின்றதும், இந்நாட்டின் சீதோஷ்ண நிலைமைக்குப் பொருத்தமானதுமான இந்திய கறவை மாடுகள் உள்ளன என்பதை அறிவாரா என்பதையும்;

(v) ஆமெனில், இந்தியாவிலிருந்து கறவை மாடுகள் ஏன் இறக்குமதி செய்யப்படுவதில்லை என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

5597/ ’14

கௌரவ பாலித தெவரப்பெரும,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2014.06.15 ஆம் திகதியன்றும் அண்மித்த தினங்களிலும் அழுத்கம, தர்கா நகரம் மற்றும் வெலிபென்ன பிரதேசங்களில் உருவாகிய கலவர நிலைமை தொடர்பில் முறைசார்ந்த விசாரணையொன்று நடைபெறுவதாயின் அதன் தற்போதைய நிலைமை யாது;

(ii) மேற்படி சம்பவங்களை ஆரம்பிப்பதற்கும் வளர்ச்சியடையச் செய்யவும் தூண்டுதலளித்தவர்கள் மற்றும் தாக்குதல்களை நடத்தியவர்கள் இனங்காணப்பட்டுள்ளனரா;

(iii) அவர்கள் யாவர்;

(iv) அவர்களுக்கு எதிராக எடுக்கப்பட்ட சட்ட நடவடிக்கைகள் யாவை

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) சேதமடைந்த வீடுகள், வர்த்தக நிலையங்கள் மற்றும் வாகனங்களின் எண்ணிக்கை யாது;

(ii) அவற்றுடன் தொடர்புடையதாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ள மற்றும் செலுத்தப்பட்டுள்ள இழப்பீடுகளின் பெறுமதி வெவ்வேறாக எவ்வளவு;

(iii) சேதமடைந்த வீடுகளும் வர்த்தக நிலையங்களும் இயல்புநிலைக்கு கொண்டுவரப்பட்டுள்ளனவா;

(iv) அவ்வெண்ணிக்கை யாது

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) மேற்படி சம்பவத்தின்போது,

(i) மரணமடைந்த மற்றும் காயமடைந்தவர்களின் எண்ணிக்கை யாது;

(ii) மரணமொன்றுக்காக செலுத்தப்பட்ட இழப்பீட்டுத்தொகை யாது;

(iii) இன்றேல் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை யாது;

(iv) மரணமடைந்தவரின் நெருங்கிய உறவினருக்கு அந்த இழப்பீடு செலுத்தப்பட்டுள்ளதா;

(v) இடம்பெயர்ந்த சிங்கள மற்றும் முஸ்லீம் குடும்பங்களின் எண்ணிக்கை எவ்வளவு;

(vi) அறிக்கையிடலில் ஈடுபட்டிருந்த வேளையில் தாக்குதலுக்கு இலக்காகிய வெகுசன ஊடகவியலாளர்களின் எண்ணிக்கை யாது;

(vii) சேதமடைந்த ஊடக சாதனங்களுக்காக இழப்பீடு செலுத்தப்படுமா

என்பதையும் அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

5657/ '14

கௌரவ விஜித ஹேரத்,— பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை நிருவாக சேவைப் பிரமாணக் குறிப்பில் முதலாவது அட்டவணையின் பின்னிணைப்பு “அ” வில் குறிப்பிடப்பட்டுள்ள இ.நி.சே. விசேட தரத்திற்குரிய பதவிகளில் திணைக்களத் தலைவர் பதவிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) இப்பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள மேற்படி இ.நி.சே. விசேட தரப் பதவிகளின் நியமன அதிகாரி யாரென்பதையும்;

(iii) இலங்கை நிருவாக சேவையின் விசேட தரத்திற்குரிய பதவிகளுக்கு நியமிக்கும் நடைமுறை யாதென்பதையும்;

(iv) இ.நி.சே. விசேட தரத்திற்குரிய பதவிகளுக்கு ஏற்கனவே நியமிக்கப்பட்டுள்ள இ.நி.சே. அல்லாத அலுவலர்களின் எண்ணிக்கை யானென்பதையும்;

(v) 2012.07.02 தொடக்கம் 2014.01.01 வரையிலான காலப்பகுதியில் இ.நி.சே. விசேட தரப் பதவிகளில் வெற்றிடங்கள நிலவிய நிறுவனங்கள் அப் பதவிகளின் பெயர்கள் மற்றும் நிறுவனங்கள் பதவிகளின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இ.நி.சே.தரம் ஒன்று அலுவலர்களை விசேட தரத்திற்கு தரமுயர்த்துவதற்காக 2014 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் நடாத்தப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்ட தகைமைகளைப் பூர்த்தி செய்திருந்த ஒவ்வொரு அலுவலரினதும் பெயர், தரம் ஒன்றுக்கு தரமுயர்த்தப்பட்ட திகதி, பட்டப்பின் பட்டம் செல்லுபடியாகும் திகதி, அப்பட்டத்தை வழங்கிய பல்கலைக்கழகம், மற்றும் பட்டத்தின் பாடத்துறை வெவ்வேறாக யாதென்பதை அவர் சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

## 2014 நவெம்பர் 21, வெள்ளிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

2761/ '12

கௌரவ சஜித் பிரேமதாச,— தபால் சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தபால் சேவை உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பதற்கான பரீட்சையின் விண்ணப்பப்படிவமொன்றிற்கு விண்ணப்பதாரியொருவரிடமிருந்து அறவிடப்பட்ட பணம் எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி பரீட்சையை நடாத்தும் பொறுப்பை இலங்கை பரீட்சைகள் திணைக்களத்திற்கு ஒப்படைக்காது இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்திற்கு ஒப்படைத்தமைக்கான காரணம் யாதென்பதையும்;

(iii) மேற்படி பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டு 2012 மே மாதம் ஆகின்றபோது ஏழு மாதங்கள் கடந்துள்ளதால் உடனடியாக பரீட்சையை நடாத்தி அதன் பெறுபேறுகளின் அடிப்படையில் தகுதியானவர்களை ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3560/ '13

கௌரவ ரவி கருணாநாயக்க,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2012 மற்றும் 2013ஆம் ஆண்டுகளுக்கான துறைசார் நிபுணர், ஆலோசகர் அல்லது இவ்வகையான வேறு அதிகாரி எவரேனும் அமைச்சில் அல்லது அமைச்சின் கீழுள்ள வேறு ஏதேனும் நிறுவனத்தில் / அலுவலகத்தில் நியமிக்கப்பட்டனரா என்பதையும்;

(ii) அவ்வாறாயின் அவ்வாறு நியமிக்கப்பட்டவர்களின் பெயர்கள் மற்றும் அவர்கள் எப்போதிருந்து நியமிக்கப்பட்டனர் என்பதையும்;

(iii) அவர்களின் நியமனங்களின் நோக்கத்தையும்;

(iv) ஒரு மாதத்திற்கு அவர்களுக்கு ஏற்படும் மொத்த செலவு ஆகியவற்றையும்

அவர் கூறுவாரா?

(ஆ) (i) மேலே(அ) (i) இல் உள்ளவாறு 2009 ஆம் ஆண்டு தொடக்கம் 2011ஆம் ஆண்டு வரை ஏதேனும் நியமனம் வழங்கப்பட்டதா என்பதையும்;

(ii) அவர்கள் இப்போதும் பணிபுரிகின்றார்களா என்பதையும்;

(iii) அவ்வாறாயின், அவர்களை நியமிப்பதற்கு கருத்திற் கொள்ளப்பட்ட தொழில்சார் தகுதிகள் அல்லது வேறு தகவுதிறன்கள் யாவை என்பதையும்

அவர் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

4405/ '13

கௌரவ புத்திக பதிரண,— தெங்கு அபிவிருத்தி, மக்கள் தோட்ட அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2013ஆம் ஆண்டில் சனவரி தொடக்கம் ஒக்றோபர் வரையான காலப்பகுதியில் இலங்கையின் மனைசார்ந்த தேங்காய் நுகர்வு எவ்வளவு என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) குறித்த காலப்பகுதியில் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட தேங்காய்களின் அளவு வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் ஏற்றுமதியை இலக்காகக் கொண்ட தேங்காய் சார்ந்த உற்பத்திகள் யாவை என்பதையும்;

(iii) அவ்வாறான ஒவ்வோர் உற்பத்தியிலிருந்தும் வருடாந்தம் ஏற்றுமதி செய்யப்படும் அளவு வெவ்வேறாக எவ்வளவென்பதையும்

அவர் இச்சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) மேற்படி (அ) இல் குறிப்பிடப்பட்டுள்ள காலப்பகுதியில் தேங்காய்த் தண்ணீர் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி தேங்காய்த் தண்ணீர் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது தேங்காய்த் தண்ணீரின் வடிவத்திலா இன்றேல் தேங்காய் தண்ணீர் சார்ந்த உற்பத்தியாகவா என்பதையும்;

(iii) தேங்காய்த் தண்ணீர் அல்லது அதுசார்ந்த உற்பத்திகள் ஏற்றுமதி செய்யப்பட்ட நாடுகள் யாவை என்பதையும்;

(iv) அந்த ஏற்றுமதிகளின் அளவு யாதென்பதையும்;

(v) தேங்காய்த் தண்ணீர் அல்லது அதுசார்ந்த உற்பத்திகளை ஏற்றுமதி செய்ததன் மூலம் பெறப்பட்ட மொத்த வருமானம் யாதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) (i) இலங்கையில் தேங்காய் உற்பத்தியை ஆரம்பிக்கும் ஒருவருக்கு அரசாங்கத்தால் வழங்க முடியுமான நிவாரணங்கள் யாவை என்பதையும்;

(ii) இந்த நிவாரணங்களை பெற்றுக்கொள்வதற்காக உற்பத்தியாளர் ஒருவர் கடைப்பிடிக்க வேண்டிய முறையியல் யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(உ) இன்றேல், ஏன்?

5203/ '14

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தெற்கு அதிவேகப் பாதையை நிர்மாணிப்பதற்காக சுவீகரிக்கப்பட்ட காணிகள் சார்பில் நட்டஈடு செலுத்தும் போது மேற்படி காணிகளின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்ட அடிப்படை யாது என்பதையும்;

(ii) இதன் போது, ஹோமாகம பிரதேச செயலாளர் பிரிவின், பன்னிபிட்டிய, சுஹத மாவத்தை, ஹிரிபிட்டிய, 137 ஆம் இலக்கத்தில் வசிக்கின்ற திருமதி கால்லகே ரங்சி காந்திக்கு குறித்த நட்டஈடு செலுத்துதல் மேற்படி அடிப்படையின் கீழ் மேற்கொள்ளப்பட்டதா என்பதையும்;

(iii) இவரின் காணியிலிருந்து சுவீகரிக்கப்பட்ட காணியின் அளவு மற்றும் அதற்காகச் செலுத்தப்பட்ட நட்டஈட்டுத் தொகை யாது என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5416/ '14

கௌரவ அஜித் குமார,— பிரதம அமைச்சரும் பௌத்தசாசன, மத அலுவல்கள் அமைச்ருமானவரைக் கேட்பதற்கு ,— (1)

(அ) (i) கொழும்பு மாவட்டத்தில் தனியார் துறையினராலும் அரசாங்கத்தினாலும் பேணிவரப்படுகின்ற வாகனத் தரிப்பு நிலையங்களின் எண்ணிக்கை யாது;

(ii) அவை அமைந்துள்ள இடங்கள் யாவை

என்பதை உள்ளூராட்சி நிறுவன மட்டத்தில் அவர் சபையில் சமர்ப்பிப்பாரா?

(ஆ) (i) அரசாங்க காணிகளை வாகனத் தரிப்பு நியைங்களைப் பேணிவருவதற்காக தனியார் துறையினருக்கு பெற்றுக்கொடுக்கின்ற முறையியல் யாது;

(ii) 2011 – 2013 ஆண்டு வரை அவ்விதமாக குத்தகைக்கு விட்டதன் மூலம் பெறப்பட்ட வருமானம் யாது;

(iii) அந்த வாகனத் தரிப்பு நிலையங்களில் ஒவ்வொரு வாகன வகைக்கும் ஏற்ப அறவிடப்படுகின்ற கட்டணங்கள் யாவை;

(iv) கட்டணம் தீர்மானிக்கப்படுகின்ற அளவுகோல்கள் யாவை;

(v) அந்த அளவுகோல்கள் தயாரிக்கப்பட்ட முறையியல் யாது

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) வாகனத் தரிப்பு நிலையங்களைப் பராமரிக்கின்ற நிறுவனங்கள் மற்றும் ஏற்புடைய செலவுத் தலைப்பு யாது;

(ii) வாகனத் தரிப்பு நிலையங்களுக்கு ஏற்படுகின்ற சேதங்களை அவற்றைப் பெற்றுகொண்டுள்ள தரப்பினர்களிடமிருந்து அறவிட்டுத் தீர்த்துக் கொள்வதற்கான முறையியலொன்று உள்ளதா;

(iii) இன்றேல், அதற்கான காரணங்கள் யாவை

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) (i) அரசாங்க காணிகளை தனியார் துறையினருக்கு கையளிப்பதற்கான நோக்கங்கள் யாவை;

(ii) அரசாங்கம் வாகனத் தரிப்பு நிலையங்களைப் பேணிவரும் பொறுப்பினை ஏற்காதிருப்பது ஏன்;

(iii) அரசாங்கத்தினால் பொது வாகனத் தரிப்பு நியைங்களைப் பேணிவருவதற்கான எதிர்காலத் திட்டமொன்று உள்ளதா

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(உ) இன்றேல், ஏன்?

5426/ '14

கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா,— நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அம்பாந்தோட்டை துறைமுகத்தின் எண்ணெய்க் களஞ்சியத் தொகுதியின் நிறுவனக் கட்டமைப்பு யாது என்பதையும்;

(ii) இது அரசாங்கத்திற்கு உரித்தான நிறுவனமொன்றா அல்லது அரசாங்கத்திற்கு உரித்தான கம்பனியொன்றா என்பதையும்;

(iii) இன்றேல், மேற்படி களஞ்சியத் தொகுதி அரசாங்கத்திற்கு உரித்தான தனியார் நிறுவனமொன்றாக இயங்கி வருகின்றதா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2014 யூன் மாதம் அல்லது அதனை அண்மித்த காலப்பகுதியில் அம்பாந்தோட்டை துறைமுகத்தின் எண்ணெய்க் களஞ்சியத் தொகுதிக்கு கொண்டுவரப்பட்ட எண்ணெய்யின் அளவு எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி எண்ணெய்யை இந்நாட்டுக்குக் கொண்டுவருவதில் சம்பந்தப்பட்டுள்ள தரப்பினர்கள் யாவர் என்பதையும்;

(iii) மேற்படி எண்ணெய்யை கொண்டுவருவதற்கு பின்பற்றப்பட்ட நடைமுறை யாது என்பதையும்;

(iv) மேற்படி எண்ணெய்யைக் கையேற்கும்போது அதன் தரம் பரிசோதிக்கப்பட்டதா என்பதையும்;

(v) ஆமெனில், மேற்படி தரப் பரிசோதனையின் பெறுபேறுகள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

5442/ '14

கௌரவ தலதா அத்துகோரல,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தேசிய பாடசாலைகளினதும் மற்றும் மாகாணசபை பாடசாலைகளினதும் கட்டடங்களையும் விளையாட்டு மைதானங்களையும் வேறு வெளி வேலைகளுக்காக வழங்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி அனுமதி வழங்கப்பட்டுள்ள சுற்றறிக்கை யாதென்பதையும்;

(iii) அத்தகைய சுற்றிக்கையொன்று இல்லையெனில், அவ்வாறு செய்வதற்கு அனுமதி வழங்கியுள்ள மாகாண கல்விப் பணிப்பாளர்கள், வலயக் கல்விப் பணிப்பாளர்கள் அல்லது பாடசாலை அதிபர்கள் உள்ளனரா என்பதையும்;

(iv) எதேனும் வெளி வேலைகளுக்காக ஏதேனுமொரு பாடசாலை அல்லது அதன் ஒரு பகுதி வழங்கப்பட்டிருப்பின், அவ்வாறு வழங்கும் உரிமையைக்கொண்ட நிறுவனம் அல்லது நபர் யாரென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5598/ '14

கௌரவ பாலித தெவரப்பெரும,— நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தெற்கு அதிவேக பாதையில் தொடங்கொட பிரவேச நிலையத்திலிருந்து மதுகம களுத்துறை பிரதான வீதிக்கு வந்ததன் பின்னர் மத்துகமயை நோக்கியதாக சுமார் 50 மீற்றர் தூரத்தில் அமைந்துள்ள தனியார் காணியொன்றில் நீண்டகாலமாக வீதிக் இடையூறான விதத்தில் மண்திடலொன்று உள்ளதென்பதையும்,

(ii) இந்த மண்திடல் வீதியில் போக்குவரத்துச் செய்யும் வாகனங்களுக்கும் பாதசாரிகளுக்கும் இடையூறாக உள்ளதென்பதையும்;

(iii) இந்த மண் திடல் காரணமாக இவ்விடத்தில் வாகன விபத்துக்கள் ஏற்பட்டுள்ளதென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) வீதிக்கு இடையூறாகவுள்ள இந்த மண் திடலை அகற்ற நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதையும்;

(ii) ஆமெனில் அத் திகதி யாது என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

# 2014 நவெம்பர் 24, திங்கட்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

2762/ '12

கௌரவ சஜித் பிரேமதாச,— விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2012 யூன் மாதம் நடாத்தப்பட்ட ஆசிய கனிஷ்ட மெய்வல்லுனர் விளையாட்டுப் போட்டிகளின் நிமித்தம் சுகததாச விளையாட்டரங்கை நவீனமயப்படுத்துவதற்கான ஒப்பந்தம் கையளிக்கப்பட்ட கம்பனி அதற்குத் தேவையான தகைமைகளை நிறைவு செய்திருந்ததா என்பதையும்;

(ii) மேற்படி கம்பனி ஓட்டப் பந்தயப்பாதையின் நவீனமயப்படுத்தலை உரிய தரத்துடனும் திருப்தியடையக்கூடிய விதத்திலும் மேற்கொண்டுள்ளதா என்பதையும்;

(iii) மேற்படி கம்பனி இதற்கு முன்னர் போகம்பர விளையாட்டரங்கில் மேற்கொண்ட நிர்மாணிப்புகள் உரிய தரத்தைக் கொண்டிருக்கவில்லை என விடுக்கப்பட்ட குற்றச்சாட்டுகளில் உண்மையேதும் உள்ளதா என்பதையும்;

(iv) சுகததாச விளையாட்டரங்கின் நவீனமயப்படுத்தல் நடவடிக்கைகளை அமைச்சின் உத்தியோகத்தர்கள் உரிய முறையில் மேற்பார்வை செய்தார்களா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3561/ '13

கௌரவ ரவி கருணாநாயக்க,— உயர் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2012 மற்றும் 2013ஆம் ஆண்டுகளுக்கான, அமைச்சில் அல்லது அமைச்சின் கீழுள்ள வேறு ஏதேனும் நிறுவனத்தில்/ அலுவலகத்தில் துறைசார் நிபுணர், ஆலோசகர் அல்லது இவ்வகையான வேறு அதிகாரி எவரேனும் நியமிக்கப்பட்டனரா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், அவ்வாறு நியமிக்கப்பட்டவர்களின் பெயர்கள் மற்றும் அவர்கள் எப்போதிருந்து நியமிக்கப்பட்டனர் என்பதையும்;

(iii) அவர்களின் நியமனங்களின் நோக்கத்தையும்;

(iv) ஒரு மாதத்திற்கு அவர்களுக்காக ஏற்படும் மொத்த செலவு ஆகியவற்றையும்

அவர் கூறுவாரா?

(ஆ) (i) மேலே (அ) (i) இல் உள்ளவாறு 2009 ஆம் ஆண்டு தொடக்கம் 2011ஆம் ஆண்டு வரை ஏதேனும் நியமனம் வழங்கப்பட்டதா என்பதையும்;

(ii) அவர்கள் இப்போதும் பணிபுரிகின்றார்காள என்பதையும்;

(iii) அவ்வாறாயின், அவர்களை நியமிப்பதற்கு கருத்திற் கொள்ளப்பட்ட தொழில்சார் தகுதிகள் அல்லது வேறு தகவுதிறன்கள் யாவை என்பதையும்

அவர் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

4406/ '13

கௌரவ புத்திக பதிரண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நாடெங்கிலுமுள்ள கல்வியியற் கல்லூரிகளுக்கென அங்கீகரிக்கப்பட்ட கல்விசாரா பணியாட்டொகுதி எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) தற்போது மேற்படி பணியாட்டொகுதிகளில் மிகை அல்லது பற்றாக்குறை காணப்படுகிறதா என்பதையும்;

(iii) மேற்படி கல்விசாரா பணியாட்டொகுதியில் ஒவ்வொரு பதவிக்குமுரிய சம்பளங்கள் மற்றும் கொடுப்பனவுகள் வெவ்வேறாக யாதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4426/ '13

கௌரவ (திருமதி) ரோஸி சேனாநாயக்க,— மீள்குடியேற்ற அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2013 ஆம் ஆண்டின் ஓகத்து மாதமளவில் வடக்கு கிழக்கு பிரதேசங்களில் மீள் குடியேற்றப்பட்ட,

(i) குடும்பங்களின் எண்ணிக்கை;

(ii) மேற்படி குடும்பங்களுக்குரிய உறுப்பினர்களின் தொகை;

(iii) இவர்கள் மத்தியில் உள்ள பெண்களின் எண்ணிக்கை;

(iv) சிறுவர்களின் எண்ணிக்கை

எவ்வளவென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேலே குறிப்பிட்டுள்ளவாறு மீள்குடியேற்றம் செய்யப்பட்ட வீடுகளில் மலசலகூட வசதிகளை கொண்ட வீடுகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

4624/ '13

கௌரவ சுஜீவ சேனசிங்ஹ,— பெற்றோலியக் கைத்தொழில்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பாவனைக்குப் பொருத்தமற்ற எரிபொருளை இறக்குமதி செய்தமை தொடர்பாக குற்றஞ்சாட்டப்பட்ட இரண்டு நிறுவனங்களுக்கு மீண்டும் எரிபொருள் இறக்குமதி செய்ய அனுமதியளிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி நிறுவனங்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி இரண்டு நிறுவனங்களும் எந்த அடிப்படையில் தடை செய்யப்பட்டது என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) விமானங்களுக்குப் பயன்படுத்துவதற்காக இறக்குமதி செய்யப்படுகின்ற எரிபொருள், மண்ணெண்ணெய்யாக பயன்படுத்தப்படுகின்றதா என்பதையும்;

(ii) ஒக்டேன் 95 ஆக இறக்குமதி செய்யப்படுகின்ற பெட்ரோல் ஒக்டேன் 90 ஆக தரம் குறைக்கப்பட்டு சந்தைக்கு விடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், அவ்வாறு செய்ய வேண்டி ஏற்பட்ட பெட்ரோல் இருப்பை வழங்கிய சீனக் கம்பனிக்கு மீண்டும் மசகு எண்ணெய் இறக்குமதி செய்வதற்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளமைக்கான காரணம் யாது என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) மேலே குறிப்பிடப்பட்ட நிறுவனங்கள், எரிபொருளை இறக்குமதி செய்யும் போது முறைகேடுகளை மேற்கொண்டுள்ளதை ஏற்றுக் கொள்வாரா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி நிறுவனத்துக்கு எதிராக தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

5104/ '14

கௌரவ அகில விராஜ் காரியவசம்,— கல்விச் சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) பாடசாலை மாணவர்களுக்காக 'சிசு சம்பத' எனும் பெயரில் காப்புறுதித் திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனின், தற்போது மேற்படி காப்புறுதித் திட்டத்திற்கான பங்களிப்பைப் பெற்றுள்ள மாணவர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iii) 2014 ஆம் ஆண்டில் மேற்படி காப்புறுதித் திட்டத்தின் கீழ் மாணவர்களுக்கு பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ள நலன்களின் முழுமொத்தப் பெறுமதி எவ்வளவென்பதையும்;

(iv) 'சிசு சம்பத' காப்புறுதி திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் தொடர்பு கொண்டுள்ள காப்புறுதி நிறுவனத்தின் பெயர் யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5349/ '14

கௌரவ (திருமதி) அனோமா கமகே,— வலு, சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) நாட்டினுள் பேணிவரப்படுகின்ற சிறிய நீர் மின் உற்பத்தி நிலையங்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) மேற்படி நீர் மின் உற்பத்தி நிலையங்கள் உள்ள மாவட்டம், இடம், அதனுடன் தொடர்புடைய நீரோட்டம் மற்றும் அவற்றின் மூலம் தேசிய மின்வலு முறைமைக்கு பெற்றுக் கொடுக்கப்படுகின்ற மின்சாரக் கொள்ளளவு ஆகியன தனித்தனியே யாவை என்பதையும்

அவர் சபையில் சமர்ப்பிப்பாரா?

(ஆ) (i) மேலே குறிப்பிடப்பட்ட சிறிய நீர் மின் உற்பத்தி நிலையங்களில் அரசாங்கத்தினால் செயற்படுத்தப்படுகின்ற மின் உற்பத்தி நிலையங்கள் உள்ளனவா என்பதையும்;

(ii) ஆமெனில், அவை யாவை என்பதையும்;

(iii) தனியார் துறையின் சிறிய மின் உற்பத்தி நிலையங்களை ஆரம்பிப்பதற்கு அங்கீகாரம் வழங்கப்படுகின்றபோது கடைப்பிடிக்கப்படுகின்ற செயல் நடைமுறை யாதென்பதையும்;

(iv) மேற்படி மின் உற்பத்தி நிலையத்தை நிர்மாணிப்பதன் காரணமாக சூழலுக்கு ஏற்படுகின்ற தாக்கம் பற்றி பின்னாய்வு செய்யப்படுகின்றதா என்பதையும்;

(v) ஆமெனில், அது எவ்வாறு மேற்கொள்ளப்படும் என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

5639/ '14

கௌரவ (திருமதி) தலதா அத்துகோரல,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2014 ஆம் ஆண்டு மே மாதம் 18 ஆம் திகதியன்று மாத்தறையில் நடாத்தப்பட்ட இராணுவ வீரர்களை பாராட்டும் தேசிய விழாவுக்காக செலவிடப்பட்ட மொத்தப் பணத் தொகை யாதென்பதையும்;

(ii) யுத்தத்தின் காரணமாக முழுமையான மற்றும் பகுதி அளவிலான ஊனமுற்ற நிலைக்கு உள்ளாகிய இராணுவ வீரர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) ஊனமுற்ற இராணுவ வீரர்களுக்காக வீடமைப்புத் திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படுகின்றதா என்பதையும்;

(iv) ஆமெனில், ஏற்கனவே நிர்மாணிக்கப்பட்டு இராணுவ வீரர்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள வீடுகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(v) வீடுகளை வழங்குவதற்கு மேலதிமாக, ஊனமுற்ற இராணுவ வீரர்களுக்காக வேறு நலன்புரிப் பணிகள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?